இன்றைய வேளாண் செய்திகள்

27.04.2013 A.M

## "மண் பரிசோதனைவிளைச்சலை அதிகரிக்கும்

விவசாயிகள் பயிர் சாகுபடிக்கு முன்பாக மண் பரிசோதனை செய்து, அதன்படி பயிர் பராமரிப்பில் ஈடுபட்டால் விளைச்சலை அதிகரிக்கலாம் என்றார் மாவட்ட வேளாண் விறைபனை துணை இயக்குநர் அண்ணாமலை.

ஆலங்குடி அருகே வாண்டாக்கோட்டையில் வியாழக்கிழமை நடைபெற்ற உழவர் பெருவிழாவில் இதைத் தெரிவித்தார்.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.சி. ராமையா தலைமை வகித்தார்.

வேளாண் உதவி இயக்குநர் ராம. சிவக்குமார், வேளாண் அலுவலர் திருப்பதி, ஊராட்சித் தலைவர் சிவசாமி உள்ளிட்டோர் பேசினர்.

## விவசாயிகளுக்கு இலவச மென்பொருள்

விவசாயம் தொடர்பான இலவச மென்பொருளை (சாப்ட்வேர்) வேளாண் விரிவாக்க மையங்களில் பெற்றுக் கொள்ளலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

கரூர் மாவட்டத்தில் உள்ள 203 வருவாய் கிராமங்களிலும் வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா நடைபெற்று வருகிறது. இதில் கருத்தரங்கம், செயல்விளக்கம், கால்நடை முகாம், இடுபொருள் விநியோகம், சிறு கண்காட்சி இடம் பெற்றுள்ளன. அனைத்து துறை சார்ந்த விஞ்ஞானிகள், அலுவலர்கள் அதிக அளவில் பங்கு பெறுகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு வேளாண்மைக் பல்கலைக்கழகத்தின் வல்லுநர் அமைப்புத் திட்டத்தில் தயாரான பயிர் மருத்துவர் என்ற மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பயிர்களுக்கும் ஒரு மென்பொருள் உள்ளது. இதை கம்ப்யூட்டரில் நிறுவினால், அந்த பயிர் சம்மந்தமான அனைத்து சாகுபடி குறிப்புகளும், பயிர் பாதுகாப்பு மற்றும் நோய்

மேலாண்மை போன்ற அனைத்து விவரங்களும் தெளிவாக கூறப்பட்டுள்ளது. மேற்கண்ட விலையில்லா மென்பொருளை அந்தந்த வேளாண்மை விரிவாக்க மையத்தில் கேட்டு பெற்றுக் கொள்ளலாம்.

## வேலை உறுதித் திட்டத்தில் விவசாயப் பணியை சேர்க்க வேண்டும்

தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் விவசாயப் பணியையும் சேர்க்க வேண்டும் என்று மன்னார்குடி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

மன்னார்குடி ஒன்றியக் குழுவின் சாதாரணக் கூட்டம் அதன் தலைவர் உதயகுமாரிதமிழ்கண்ணன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்தில் உறுப்பினர்களின் விவாதம்:

க. அசோகன்: கூட்ட அஜெண்டாவில் செலவினம் மட்டுமே இடம் பெற்றுள்ளது. வரவு குறிப்பிடவில்லை. இதுகுறித்து விளக்கம் தரவேண்டும்.

அமிர்தலிங்கம், வி. ராகவன்: கூட்டத்தை ஒத்திவைத்து வரவு பற்றிய அறிக்கை வழங்கிய பின்னர் வேறு தேதியில் கூட்டம் நடத்தலாம்.

ஆணையர் எஸ். சிவக்குமார்: வரவு பட்டியல் குறித்த தகவல் உறுப்பினர்களுக்கு விரைவில் வழங்கப்படும்.

ஆணையரின் பதில் திருப்தி அளிக்கவில்லை எனக் கூறி அதிமுக, திமுக, இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பில் ஈடுபட்டனர்.

(கோ. காந்தி, எல். அறிவழகன், என். துரைராஜ், ச. ரவிச்சந்திரன், ஆர். சேகர் ஆகிய ஐந்து அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பில் கலந்து கொள்ளவில்லை).

துணைத் தலைவர் கா. தமிழச்செல்வம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். இதையடுத்து, அனைத்து உறுப்பினர்களும் மீண்டும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

வி. ராகவன்: பள்ளி அருகில் உள்ள மதுக்கடைகளை அப்புறப்படுத்திட வேண்டும்.

பா. அன்னபூரணி: மேலநெம்மேலி, கீழநெம்மேலி இணைப்புச் சாலை அமைக்க திட்ட மதிப்பீடு போடப்பட்டு, பணிகள் இதுவரையில் தொடங்கப்படவில்லை.

தமிழ்ச்செல்வம்:கடந்த ஒன்றரை ஆண்டு காலத்தில் எனது வார்டில் எந்த திட்டப் பணியும் நடைபெறவில்லை. கோரிக்கை வைத்தும் எந்த பயனும் இல்லை.

வி. செந்தமிழ்ச்செல்வி: சுந்தரக்கோட்டை தொடக்கப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் அமைத்து, கழிப்பிட வசதி செய்து தர வேண்டும்.

க. அசோகன்: துளசேந்திரபுரம் ஏரியை தூர்வார வேண்டும். திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் நடைபெறுவதுபோல் நூறு நாள் வேலை திட்டத்தில் விவசாயப் பணியையும் இணைக்க மாவட்ட நிர்வாகத்திடம் அனுமதி பெற முயற்சிக்க வேண்டும். (மற்ற உறுப்பினர்களும் இதை வழிமொழிந்தனர்)

துணைத் தலைவர் க. தமிழ்ச்செல்வம்: நீதிமன்ற உத்தரவின்படி மதுக்கடைகள் அகற்றப்பட்டு வருகின்றன. உறுப்பினர்கள் மற்ற துறை சார்ந்த குறைபாடுகளை மனுவாக அளித்தால் கூட்டத்தின் தீர்மானத்துடன் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பிட வசதியாக இருக்கும்.

தலைவர்: ஒன்றியத்திற்கான நிதி வரவு குறித்த முழுமையான தகவல் ஒருவார காலத்துக்குள் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும். பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தில் ஒன்றியக்குழு உறுப்பினர்களுக்கும் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என ஊராட்சித் தலைவரிடம் அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றார்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 24.01 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 24.01 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 126 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### சிலருக்கு மட்டுமே பயிர் காப்பீட்டுத் தொகை கிடைக்கும்

பயிர் காப்பீட்டுத் தொகை சில விவசாயிகளுக்கு மட்டுமே கிடைக்கும் என தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் சாமி. நடராஜன், பயிர் காப்பீட்டுத் தொகை கிடைக்குமா எனக் கேள்வி எழுப்பினார்.

இதைத்தொடர்ந்து, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்ட மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வ. பழனியப்பன் பேசியது: மாவட்டத்தில் சுமார் 400 இடங்களில் பயிர் அறுவடை சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மே 31-ம் தேதிக்குள் முழுவதுமாக முடிக்கப்பட்டு புள்ளியியல் துறை மூலம் காப்பீட்டு நிறுவனத்துக்கு அறிக்கை அனுப்பப்படும். ஆனால், 400 இடங்களிலும் நல்ல மகசூல் கிடைத்துள்ளது. ஒரு சில வருவாய் சரகங்களில் மட்டுமே மகசூல் குறைவாக இருந்தது. எனவே, சில விவசாயிகளுக்கு மட்டும்தான் பயிர் காப்பீட்டுத் தொகை கிடைக்கும்.

காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கச் மாவட்ட செயலர் சுவாமிமலை விமல்நாதன்: திரு ஆரூரான் சர்க்கரை ஆலை, அம்பிகா சர்க்கரை ஆலை ஆகியன அரைவை செய்த கரும்புக்கு சுமார் ரூ.40 கோடிக்கும் அதிகமாக பணம் பட்டுவாடா செய்யாமல் விவசாயிகளை அலைக்கழிக்கின்றனர். விதிகளின்படி 14 நாட்களுக்குப் பின்னர் வழங்கப்படும் பணத்துக்கு 15 % வட்டி சேர்த்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும். இதுதொடர்பாக ஆட்சியர் உத்தரவிட்டும் அதை மதிக்காத ஆலை நிர்வாகத்தின் மீது நடவடிக்கை எடுக்கவும், பல கோடி ரூபாய் நிலுவை வைத்துள்ள ஆலை நிர்வாகத்தை அரசே ஏற்று நடத்தவும் முதல்வருக்குப் பரிந்துரை செய்ய வேண்டும்.

அம்பிகா சர்க்கரை ஆலை அலுவலர் பேசியது: ஏற்கெனவே விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. மே 31-ம் தேதிக்குள் மீதமுள்ள அனைவருக்கும் பட்டுவாடா செய்யப்படும்.

வா. வீரசேனன்: பட்டுக்கோட்டை - மன்னார்குடி இடையே புதிய ரயில் பாதை அமைப்பதற்காக சுமார் 1,000 ஏக்கர் விளைநிலங்களை விவசாயம் செய்ய விடாமல் ரயில்வே நிர்வாகமும், அதன் ஒப்பந்ததாரர்களும் தடுத்து வருகின்றனர். ரயில் பாதை அமைப்பதற்கு தமிழக அரசு அனுமதி தராத நிலையில், விவசாயிகளுக்கு எந்தவித இழப்பீடும் வழங்காத நிலையில் ரயில்வே துறையால் விளைநிலங்கள் அபகரிப்பட்டுள்ளன. எனது நிலம் அபகரிக்கப்பட்டது. பட்டுக்கோட்டை தாலுகா காவல் நிலையத்தில் ரயில்வே அதிகாரிகள், ஒப்பந்ததாரர்கள் மீது புகார் செய்தும், வழக்குப் பதிவு செய்யப்படவில்லை.

மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன்: நிலம் கையகப்படுத்துவது தொடர்பாக ஆட்கள் நியமிக்கப்படவில்லை. அதற்கான அரசாணையும் பிறப்பிக்கப்படவில்லை. எனவே, அது ஆக்கிரமிப்புதான் என்றார்.

### விவசாயிகள் கருப்புப் பட்டையுடன் பங்கேற்பு

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கருப்புப் பட்டை அணிந்து பங்கேற்றனர்.

ஆட்சியரக வளாகத்தில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் பங்கேற்ற விவசாயிகள் பலர். கூட்டுறவு சங்கத் தேர்தலில் முறைகேடுகளைக் கண்டித்தும், மும்முனை மின்சாரம் 3 மணி நேரம் கூட விநியோகம் செய்யப்படாததைக் கண்டித்தும் கருப்புப் பட்டை அணிந்துள்ளதாக தெரிவித்தனர்.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சொக்கலிங்கம் துறை வாரியாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்த ஆட்சியரின் அறிக்கையை வாசித்தார். அப்போது, பகலில் 3 மணிநேரமும், இரவில் மின் தொகுப்பு நல்ல நிலையில் இருந்தால் 3 மணிநேரமும் என மொத்தம் 6 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருவதாகக் கூறினார்.

3 மணிநேரம் கூட மும்முனை மின்சாரம் கிடைப்பதில்லை. மாவட்ட ஆட்சியரின் அறிக்கை தவறாக உள்ளதால், அதை ஏற்க முடியாது. மின்வாரிய அலுவலர் உரிய பதில் அளிக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

மின் வாரிய மேற்பார்வை பொறியாளர் சி.எம். ரவீந்திரன் பேசியது:

இப்போது 6 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படவில்லை என்றாலும், காற்றாலைகளில் மின் உற்பத்தி அதிகமாக இருக்கும்போதும், மின் தொகுப்பிலிருந்து சீரான மின்சாரம் கிடைக்கும்போதும் 6 மணிநேரம் மும்முனை மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. விவசாயிகளின் கருத்துக்கள் மேலிடத்துக்கு தெரிவிக்கப்படும் என்றார்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் சாமி. நடராஜன்: விவசாயத்துக்கு 12 மணிநேரம் மும்முனை மின்சாரம் வழங்கப்படும் எனத் தமிழக அரசு அறிவித்தது. ஆனால், அது அறிவிப்போடு உள்ளது. கோடை சாகுபடியைக் காப்பாற்ற நாள்தோறும் குறைந்தபட்சம் 12 மணிநேரம் முன்முனை மின்சாரம் விநியோகம் செய்ய வேண்டும்

ஆட்சியர் கா. பாஸ்கரன்: ஏற்கெனவே, இதுதொடர்பான கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மேலும், 12 மணிநேரம் மும்முனை மின்சாரமும், 20 மணிநேரம் மின்சாரமும் விநியோகம் செய்யுமாறு அரசுக்கு எழுதி அனுப்பப்பட்டுள்ளது.

**வறட்சி பாதிப்பு கணக்கெடுப்பு குறித்து அறிக்கை தேவை**

வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்து மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பை விவசாயிகளுக்கு அறிக்கையாக வெளியிட வேண்டும் என்று, நாமக்கல்லில் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஆட்சியர் டி.ஜகந்நாதன் தலைமையில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்தில் விவசாயிகள் பல்வேறு குறைகளை தெரிவித்தனர்.

அதன்படி, வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்கள் குறித்த கணக்கெடுப்பு நாமக்கல் மாவட்டத்தில் முறையாக நடத்தப்படவில்லை. இதனால், உண்மையில் பாதிக்கப்பட்ட பல விவசாயிகளுக்கு பலன் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் இந்தக் கணக்கெடுப்பு விவரங்களை விவசாயிகள் அறிய அறிக்கையாக வெளியிட வேண்டும்.

பள்ளிப்பாளையம், குமாரபாளையம் பகுதிகளில் காவிரி ஆற்றில் தொடர்ந்து சாயக்கழிவு கலப்பதால் குடிநீர் ஆதாரங்கள் மாசுபடுகின்றன. இதுதொடர்பாக அளித்த புகாரின் அடிப்படையில், குமாரபாளையத்தில் மட்டும் 2 நாள்கள் சாய ஆலைகள் இடிக்கப்பட்டு, பிறகு இந்த நடவடிக்கைகள் கிடப்பில் போடப்பட்டன. இதனால், தொடர்ந்து காவிரி ஆறு மாசடைந்து துர்நாற்றும் வீசுகிறது. காவி நீர் மாசுபடுவதைத் தடுக்க மாவட்ட நிர்வாகம் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வறட்சிக் காலத்திலும் திருச்செங்கோடு கொல்லிப்பட்டி பகுதியில் நல்ல நிலையில் உள்ள நிலத்தடி நீர் மட்டம், சாயக் கழிவுநீர் கலப்பதால் அவற்றை பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், அந்தப் பகுதியில் வாழை, மரவள்ளி முழுமையாகக் கருகிவிட்டன. எனினும், இதுதொடர்பாக மாவட்ட நிர்வாகத்துக்கு தவறான அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளை மாவட்ட நிர்வாகம் நேரடியாக ஆய்வு செய்து நிலத்தடி நீரில் சாயக் கழிவுநீர் கலப்பதை தடுத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் தெரிவிக்கப்பட்டன.

தொடர்ந்து பேசிய ஆட்சியர், இந்தக் குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

கூட்டுறவு இணைப் பதிவாளர் சிவ.முத்துகுமாரசாமி, வேளாண்மை இணை இயக்குநர் பிரபாகரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கிருஷ்ணகுமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## அடுத்த நான்கு நாள்கள் 15 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்பு

தற்போதைய வானிலை அடிப்படையில், நாமக்கல் மாவட்டத்தில் அடுத்த நான்கு நாள்களுக்கு 4 மிமீ முதல் 15 மிமீ வரை மழை பெய்ய வாய்ப்புள்ளதாக, நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

இதுகுறித்து அந்த மையம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த 4 நாள்களுக்கு வானம் லேசான மேகமூட்டத்துடன் இருப்பதுடன், பரவலாக 4 மிமீ முதல் 15 மிமீ வரை மழை பெய்யவும் வாய்ப்புள்ளது.

காற்றின் திசைவேகம் மணிக்கு 3 கிமீ முதல் 5 கிமீ வேகத்தில் தெற்கிலிருந்து வீசக்கூடும். வெப்பநிலை குறைந்தபட்சம் 73.4 டிகிரி பாரன்ஹீட் முதல் அதிகபட்சம் 98.6 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 42 சதம் முதல் அதிகபட்சம் 81 சதம் வரையும் இருக்கும்.

கோழிப்பண்ணையாளர்களுக்கு..:பெரும்பாலான இடங்களில் கோடை மழைக்கான வாய்ப்பு காணப்படுவதால், பகலில் வெப்பம் குறைய வாய்ப்புள்ளது. இதனால், கோழிகளிடையே வெப்ப அயற்சி குறைந்து காணப்படும். இருப்பினும், கோடைகால தீவன மேலாண்மை முறைகளைத் தொடர்ந்து கடைப்பிடித்திட வேண்டும்.

கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கோழிகள் பெரும்பாலும் வெப்ப அயற்சி மற்றும் மேல் மூச்சுக்குழல் நோய்களால் இறந்திருப்பது தெரிய வந்துள்ளது. தவிர, குடிநீரில் ஈகோலை கிருமிகளின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பண்ணையாளர்கள் கோடைகால பராமரிப்பு மற்றும் உயிர் பாதுகாப்பு முறைகளையும், சுத்தமான குடிநீர் அளிப்பது போன்றவற்றை மேற்கொள்ளவும் வேண்டும்.

வேளாண் விவசாயிகளுக்கு..: தற்போது கிடைக்கும் கோடை மழையை பயன்படுத்தி மானாவாரியாக பாசிப்பயறு மற்றும் நிலக்கடலை சாகுபடியை மேற்கொள்ளலாம். வறட்சியைத் தாங்கி வளரும் பாசிப்பயறு ரகங்களான வம்பன்-2, கோட-8 மற்றும் நிலக்கடலை ரகங்களான கோட-6, டிஎம்வி-13 ஆகிய ரகங்களை தேர்வு செய்து அளிக்கலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பண்ணைக் குட்டைகள் அமைத்து மீன் வளர்க்க மானிய உதவி

விவசாயிகளுக்கு கூடுதல் வருவாயை ஏற்படுத்தித் தரும் வகையில், பண்ணைக்குட்டைகள் அமைத்து மீன் வளர்க்க மானியம் வழங்கப்படுகிறது.

தேசிய வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம், பல்நோக்கு பண்ணைக் குட்டைகள் என்ற அடிப்படையில் 25 குட்டைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. விவசாயிகளது நிலத்தில் 2,500 சதுர மீட்டர் பரப்பளவில், தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் இந்தக் குட்டைகள் அமைத்து தரப்படும். மின்வளர்ப்பு மேற்கொள்ளவும், மீன் குஞ்சுகள், தீவனம் வாங்குவதற்காக 50 சதம் மானியம் வழங்கப்படும். முதலாம் ஆண்டுக்கு மானியமாக ரூ.23 ஆயிரம் வழங்கப்படும்.

இந்தத் திட்டத்தில் அமைக்கப்படும் பண்ணைக்குட்டைகள் அமையும் பகுதி களிமண் பகுதியாகவும், நீர் ஆதாராம் கொண்டாதாகவும் இருக்க வேண்டும். இந்தக் குட்டையில் கட்லோ, ரோகு, மிர்கால், புல்கெண்டை, சாதா கெண்டை இன மீன் குஞ்சுகளை 2,500 எண்ணிக்கையில் இருப்பு செய்து 8 மாதங்களில் ஆயிரம் கிலோ மீன் உற்பத்தி செய்யலாம்.

தேர்வு செய்யப்படும் விவசாயிகளுக்கு மீன் வளர்ப்பு குறித்து 2 நாள்கள் பயிற்சி அளிக்கப்படும்.

மீன் வளர்ப்பில் ஆர்வமுள்ள, நில வசதி கொண்ட சிறு, குறு, தலித், பழங்குடியின விவசாயிகள் மட்டும் உரிய ஆவணங்களுடன் கிருஷ்ணகிரி உள்நாட்டு மீன்வள உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகிப் பயன்பெறலாம். மேலும், விவரங்களுக்கு 04343-235745, 94430-79167 என்ற தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 32.50 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை நிலவரப்படி 32.50 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 15 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீரும், வாய்க்காலில் 1,100 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 1.43 டி.எம்.சி.

## பாரம்பரிய வேளாண் பொருள்களை பாதுகாக்க வலியுறுத்தி பேரணி

பாரம்பரிய வேளாண் பொருள்களை பாதுகாக்க வலியுறுத்தி, சத்தியில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற விழிப்புணர்வுப் பேரணியில் ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

ரசாயனக் கலவை இல்லாமல் முன்னோர்கள் பயன்படுத்தி வந்த பாரம்பரிய பொருள்களான இளநீர், சீகைக்காய் மற்றும் பருத்தியை பாதுகாக்க வலியுறுத்தியும், இதுகுறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வேளாண் துறை சார்பில் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

சத்தி நகராட்சித் தலைவர் ஓ.எம்.சுப்பிரமணியம் துவக்கி வைத்தார். உழவர் சந்தையில் இருந்து புறப்பட்ட பேரணி, முக்கிய வீதிகள் வழியாகச் சென்று மணிக்கூண்டை சென்றடைந்தது.

வேளாண்மை துணை இயக்குநர் கொ.மாரியப்பன், உதவி இயக்குநர் எஸ்.ரங்கநாயகி, வேளாண் அலுவலர் சிவபிரகாஷ், தோட்டக்கலை அலுவலர் நக்கீரன், வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை அலுவலர் லட்சுமிநாராயணன், பள்ளி மாணவ, மாணவிகள் உள்பட 100-க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

### உழவர் பெருவிழா

சத்தியமங்கலத்தில் உள்ள அரசு விதைப் பண்ணையில் வெள்ளிக்கிழமை உழவர் பெருவிழா நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் ரங்கநாயகி தலைமை வகித்தார். துணை இயக்குநர் சி.ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். சத்தி நகர்மன்றத் தலைவர் ஓ.எம்.சுப்பிரமணியம் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசினார். கரும்புகரணை நேர்த்தி நீடித்த கரும்பு சாகுபடி, துவரை நாற்று நடவு, எலி ஒழிப்பு, விதை நேர்த்தி, வாழைக்கன்று மற்றும் மஞ்சள் விதைக் கிழங்கு நேர்த்தி ஆகிய தொழில்நுட்பங்கள் குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது. மேலும் தோட்டக்கலை, வேளாண்மை மற்றும் கால்நடை மருத்துவம் உள்ளிட்ட நவீன பயன்பாடுகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் வேளாண் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

### வறட்சி: கருகும் தென்னை மரங்கள்!

கடும் வறட்சியின் காரணமாக காங்கயம் பகுதியில் தென்னை மரங்கள் கருகுகின்றன.

காங்கயம் பகுதியில் தேங்காய் எண்ணெய் உற்பத்தி தொழில் பிரதானமாக நடந்து வருகிறது. இதன் காரணமாக, காங்கயத்தைச் சுற்றியுள்ள நத்தக்காடையூர், மருதுறை, தாமரைக்காட்டு வலசு, முத்தூர், ஊதியூர் ஆகிய பகுதிகளில் பல ஆயிரம் தென்னை மரங்கள் உள்ளன. காங்கயம் பகுதி மழை மறைவுப் பிரதேசமாக இருப்பதால், இப் பகுதியில் மழை குறைவாகவே பெய்யும்.

தற்போது தமிழகம் முழுவதும் போதிய மழை இல்லாத காரணத்தால், கடும் வறட்சி நிலவுகிறது. காங்கயத்தில் இதன் தாக்கம் அதிகமாகவே உள்ளது. இங்குள்ள கிணறுகள், ஆழ்குழாய் கிணறுகள் ஆகியவை வறண்டு காணப்படுவதால், தென்னை மரங்களுக்கு போதிய தண்ணீர் இல்லாமல் முற்றிலும் கருகிப் போய் உள்ளன.

பொதுவாக தென்னை மரங்கள் உயிர் வாழ நல்ல மழையும், போதிய தண்ணீர் வசதியும் தேவை. வறட்சி காரணமாக மாதக்கணக்கில் தென்னை மரங்களுக்கு தண்ணீர் விட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் 20 சதவீத தென்னை மரங்கள் முற்றிலும் கருகிவிட்டன.

இதுகுறித்து இப் பகுதி விவசாயிகள் கூறியது: பொதுவாக தென்னை மரங்களுக்கு நல்ல தண்ணீர் கிடைத்தால் மட்டுமே சுமார் 100-ல் இருந்து 250 காய்கள் வரை பிடிக்கும். இதிலும் எரியோபைட், இலைக் கருகல் போன்ற நோய்கள் தாக்காமல் இருந்தால், நல்ல தரமான தேங்காய்கள் கிடைக்கும். வறட்சி காரணமாக தற்போது போதிய காய்கள் பிடிக்காமல் மரங்கள் வெறுமனே உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்படுகிறது.

தற்போது தென்னை மரங்களை கருகாமல் உயிருடன் காப்பதைக் கடமையாகக் கொண்டுள்ளோம். நொய்யல் ஆற்றின் கரையில் வசிக்கும் சில விவசாயிகள் தங்கள தென்னந்தோப்புகளைக் காப்பதற்காக திருப்பூர் சாயக் கழிவு நீரை நொய்யல் ஆற்றில் இருந்து எடுத்து, மரங்களுக்கு ஊற்றி வருகின்றனர். இதனால், தென்னை மரங்கள் பாதிக்கப்படும். இருந்தாலும், மழை பெய்யும் வரை இந்த மரங்களைக் காப்பாற்றும் பொருட்டு, இந்தச் சாயக் கழிவு நீரை மரங்களுக்கு பாய்ச்சி வருகின்றனர்.

சிலர் பணம் கொடுத்து டிராக்டர்களில் தண்ணீர் வாங்கி, ஊற்றி காப்பாற்றி வந்தனர். பொருளாதார நெருக்கடியின் காரணமாக தொடர்ந்து தண்ணீர் வாங்கி ஊற்ற முடியவில்லை. இனி, மழை பெய்தால் மட்டுமே தென்னை மரங்களைக் காப்பாற்ற முடியும். இல்லையென்றால், அவை கருகி வருவதை யாராலும் தடுக்க முடியாது, என்றனர்.

கடும் வறட்சியால் ஆங்காங்கே தென்னை மரங்கள் கருகிப் போய் காட்சியளிப்பது அனைவரின் மனதையும் வேதனை கொள்ளச் செய்கிறது.

## திருத்தணி பகுதியில் பலத்த மழை

திருத்தணி மற்றும் சுற்றுப்பகுதி கிராமங்களில் வெள்ளிக்கிழமை பெய்த கன மழையால் சாலைகளில் மழைநீர் வெள்ளம் போல் பெருக்கெடுத்து ஓடியது.

திருத்தணி மற்றும் பள்ளிப்பட்டு தாலுகாவில் ஆண்டில் 3 மாதங்கள் தவிர மற்ற மாதங்கள் முழுவதும் குளிர்ச்சியான காலநிலை நிலவும். கடந்த இரு ஆண்டாக பருவ மழை பொய்த்ததைத் தொடர்ந்து குளிர்ந்த காலநிலை மாறி, கடும் வறட்சியால் வெப்ப காற்று வீசி வருகிறது.

தற்போதே திருத்தணி நகரில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. கிராமங்களில் குடிநீருக்காகப் போடப்பட்ட ஆழ்துளை கிணறுகள் வறண்டதால் பொதுமக்கள் குடிநீர் தட்டுப்பாட்டால் அவதியடைந்து வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக மாலை நேரங்களில் திடீரென மழை பெய்து வருகிறது. திருத்தணி, ஆர்.கே.பேட்டை, பள்ளிப்பட்டு உள்ளிட்ட ஊர்களிலும் பரவலாக மழை பெய்தது. வெள்ளிக்கிழமை திருத்தணி நகரில் பெய்த பலத்த மழையால் ம.பொ.சி.சாலை, மேட்டுத் தெரு, 2-வது ரயில்வே கேட்டில் மழைநீர் கழிவுநீருடன் கலந்து ஓடியது. ம.பொ.சி.சாலையில் மழைநீர் குளம் போல் தேங்கி நின்றது. இதனால் ரயில் பயணிகள், பொதுமக்கள் என அனைத்து தரப்பினரும் வேறுவழியின்றி கழிவுநீரில் நடந்து சென்றனர்.

மேலும் அவ்வழியாக வந்த இருசக்கர, கார், ஆட்டோ, ஆகிய வாகனங்கள் மழைநீரில் நீந்தி சென்றன. திருத்தணி மற்றும் சுற்றியுள்ள கிராமப் பகுதிகளில் பரவலாக மழை பெய்ததால் விவசாயிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு காய்கறி விதை

கள்ளக்குறிச்சி ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட ஆலத்தூர் கிராமத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் திருந்திய நெல் சாகுபடிக்காக கண்காட்சியில் வைத்திருந்த ஸ்டாலில் நான்கு நாற்றுகள் மட்டுமே பெயரளவுக்கு இடம்பெற்றிருந்தன.

வேளாண் உதவி இயக்குநர் கே.தர்மலிங்கம் தலைமை வகித்தார். ஒன்றியக்குழு உறுப்பினர் ச.சக்திவேல், மாவட்டக் கவுன்சிலர் து.ராயப்பன், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் செல்வி உள்ளிட்ட பலர் முன்னிலை வகித்தனர். ஊராட்சி மன்றத் தலைவர் மு.கண்ணன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக பங்கேற்ற ஒன்றியக்குழுத் தலைவர் அ.இராஜசேகர், விவசாயிகளுக்கு காய்கறி விதைகளை வழங்கி பேசியதாவது: வேளாண்மை திட்டத்துக்காக தமிழக முதல்வர் அதிக அளவில் நிதி ஒதுக்கியுள்ளார். விழுப்புரம் மாவட்டத்துக்காக ரூ.3 கோடி ஒதுக்கியுள்ளார். உழவர் பெருவிழாவில் வேளாண்மை அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த பலரும் பங்கேற்பர். விவசாயிகள் குறைந்த செலவில் பயிரிட திருந்திய நெல் சாகுபடி செய்து அதிக அளவில் பயிர்களை பெறலாம். ஒரு ஏக்கரில் இம் மாவட்டத்தில் 106 டன் கரும்பு பயிர் செய்து

சாதனையும் படைத்துள்ளனர். விவசாயிகள் சந்தேகத்தை பூர்த்தி செய்வதற்காக வேளாண்துறை அலுவலர்களை அனுகி இச்சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

ஊராட்சி செயலர் அ.சக்திவேல், செயலாளர் வி.ரவிக்குமார், அவைத் தலைவர் ஜி.முத்து, கிளை பொருளாளர் கே.தினகரன், ராஜமாணிக்கம், முத்துராமன், சிதம்பரம் மற்றும் வேளாண் துறைகளைச் சார்ந்த அலுவலர்கள், விவசாயிகள் ஊர் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.

## வீட்டுமனைகளாகும் விளைநிலங்கள்: கட்டுப்படுத்த விவசாயிகள் வலியுறுத்தல்

கடலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் 6,000 ஏக்கர் விளைநிலங்கள் வீட்டுமனைகளாக மாற்றம் செய்யப்படுகின்றன. இதை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமையில் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டரங்கில் வெள்ளிக்கிழமை நடந்தது.

ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அசோகன் மற்றும் பல்வேறு துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

வேல்முருகன்: உழவர் பெருவிழா பெயரளவில் மட்டுமே நடக்கிறது. மதிய உணவு நேரத்துக்கு வரும் அதிகாரிகள், 10 நிமிடங்களில் கூட்டத்தை முடித்துவிட்டு, உணவு அருந்திவிட்டு சென்று விடுகின்றனர். இதனால் அரசின் நோக்கம் நிறைவேறவில்லை. உழவர் பாதுகாப்பு அட்டைக்கான விண்ணப்பங்களைப் பெற சிறப்பு முகாம்களை நடத்த வேண்டும்.

மணிகண்டன்: திட்டக்குடி வட்டத்தில் பட்டா கேட்டு 30 ஆண்டுகளாக தொடர்ந்து மனு கொடுத்தும் இன்னும் பட்டா பெறாத விவசாயிகள் பெருமளவில் உள்ளனர். இந்த மனுக்களை ஆட்சியர் நேரடியாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரவீந்திரன்: பண்ணைக்குட்டை அமைக்கும் திட்டத்தை தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டம் மூலம் செயல்படுத்துவது பயனளிக்காது. இந்த திட்டத்தில் கடலூர் மாவட்டத்துக்கு ரூ.200 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தில் இந்தப் பணிகளை மேற்கொண்டால் நிதி விரயம் மட்டுமே ஏற்படும் என்பதால், இந்தத் திட்டத்தை மாற்று வழியில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கடலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் ஏறத்தாழ 6 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் வீட்டு மனைகளாக மாற்றப்படுகின்றன. இதனால் சாகுபடி பரப்பு குறைந்து கொண்டே வருகிறது. இதைத் தடுக்க மாவட்ட நிர்வாகம் உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாதவன்: வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். காவிரிப் பாசன பகுதிகள் மட்டுமல்லாது மாவட்டத்தின் பிற பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கான வறட்சி நிவாரணம் குறித்து அறிவிக்க வேண்டும்.

குஞ்சிதபாதம்: நிலத்தின் அளவுக்கு ஏற்ப பயிர்க்கடன் வழங்க கூட்டுறவு வங்கிகள் முன்வர வேண்டும்.

சோமசுந்தரம்: பெண்ணாடம் தனியார் சர்க்கரை ஆலை, விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்புக்கான தொகையை வழங்காததால், புதிய கடனை பெற முடியாத நிலையில் உள்ளனர். ஆலை நிர்வாகம் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய தொகையை 14 நாள்களுக்குள் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பதில் அளித்து மாவட்ட ஆட்சியர் பேசியது: கடலூர் மாவட்டத்தில் 2,400 பண்ணைக் குட்டைகள் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது. ஆனால் இப்போது வரை 40 விண்ணப்பங்கள் மட்டுமே பெறப்பட்டுள்ளன.

டெல்டா பகுதிகளில் விடுபட்ட 1,000 விவசாயிகளுக்கு விரைவில் வறட்சி நிவாரணம் வழங்கப்படும் என்றார்.

### இந்த ஆண்டு பருவமழை இயல்பாக இருக்கும்: இந்திய வானிலை மையம் அறிவிப்பு

இந்த ஆண்டு நாட்டில் பருவமழை இயல்பானதாக இருக்கும் என்று அறிவியல், தொழில்நுட்பம், புவி அறிவியல் துறைகளுக்கான மத்திய அமைச்சர் ஜெய்பால் ரெட்டி, இந்திய வானிலை மையத்தின் இயக்குநர் ஜெனரல் டாக்டர் ஆர்.எஸ். ரதோர் ஆகியோர் தெரிவித்தனர்.

இருவரும் கூட்டாக புது தில்லியில் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் கூறியது:

2013-ஆம் ஆண்டுக்கான தென்மேற்குப் பருவமழை கடந்த ஆண்டைப் போலவே இயல்பானதாக இருக்கும். தொடர்ந்து நான்காவது ஆண்டாக பருவ மழை இயல்பானதாக இருக்கிறது.

ஜூன் முதல் செப்டம்பர் வரை பெய்யும் இந்த மழை நாட்டின் வேளாண்மை உற்பத்திக்குப் பெரிதும் உதவும். நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் பருவ மழை குறித்து இப்போது

அறிவிக்கவில்லை. இப்போது வறட்சி அனுபவித்து வரும் பகுதிகளிலும் இயல்பான பருவ மழை இருக்கும் என நம்புகிறோம்.

2013-ஆம் ஆண்டுக்கான பருவமழை குறித்த முன்னறிவிப்பை, ஏப்ரல், ஜூன் என இரண்டு கட்டங்களாக இந்திய வானிலை மையம் வெளியிடும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

## வறட்சியால் பொய்த்துப்போனது நெல் சாகுபடி: 3ல் ஒரு பங்கு மட்டுமே விளைச்சல்

கடலூர் மாவட்டத்தில் வறட்சி காரணமாக நெல் விளைச்சல் கடுமையாக குறைந்ததால் அரசு கொள்முதல் நிலையங்களில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு மூன்றில் ஒரு பங்கு நெல் மட்டுமே கொள்முதல் செய்ய முடிந்தது. தமிழகத்தில் கடந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ மழை பொய்துப் போனது. இதனால் காவிரியில் வரவேண்டிய தண்ணீர் வராததால் காவிரி டெல்டா மாவட்டங்களில் முழுமையாக நெல் நடவு செய்ய முடியவில்லை. இதை சரி செய்ய, பருவமழை கடைசியாக பெய்யும் என எதிர்பார்த்து சமுதாய நாற்றங்கால் திட்டத்தை அரசு கொண்டு வந்தது.

ஆனால் நாற்று விட்ட விவசாயிகள் காவிரியில் தண்ணீர் வரும் என்கிற நம்பிக்கை போய் விட்டதால் நாற்றங்காலில் இருந்து நாற்றுகளை பிடுங்கி நடவு செய்யாமல் விட்டு விட்டனர். நிலத்தடி நீர் உள்ள பகுதியில் மின் மோட்டார் பம்புசெட் கொண்டு பயன்படுத்த முடியாத அளவுக்கு மின் தடை அதிகரித்தது. இதனால் விவசாயிகள் நெற்பயிர் செய்யும் பரப்பளவு குறைந்தது.கடலூர் மாவட்டத்தில் 2.50 லட்சம் ஏக்கரில், 1.90 லட்சம் ஏக்கரில் மட்டுமே சம்பா நடவு செய்யப்பட்டது. கதிர் வரும் தருணத்தில் தண்ணீர் இல்லாமல் நெற்பயிர் காய்ந்து கருகியது. தண்ணீர் பாய்ச்ச மாற்று வழியைத்தேடி அலைந்து திரிந்தனர் விவசாயிகள். இன்னும் சிலர் குடிநீருக்கு பயன்படுத்தப்படும் டேங்கர் லாரிகளில் தண்ணீர் கொண்டுவந்து நெற்பயிருக்கு தெளித்து பயிரைக் காப்பாற்றினர்.உற்பத்தி குறைவால் கடலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 135 இடங்களில் துவக்கப்பட்ட நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இந்த ஆண்டு வெறும் 86 இடங்களில் மட்டுமே கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. அதன் மூலம் அரசு ஏ கிரேடு நெல் கிலோ ஒன்றுக்கு ரூ.13.50-க்கும், பி கிரேடு ரூ.13-க்கும் கொள்முதல் செய்யப்பட்டது. நெல் உற்பத்தி குறைந்ததால் வெளிச்சந்தையில் நெல் தட்டுப்பாடு ஏற்பட்டது.

இதன்காரணமாக வியாபாரிகள் கிலோ ரூ.21 வரை கொடுத்து வாங்கினர். விவசாயிகள் கொள்முதல் நிலையங்களுக்குச் செல்லாமல் மார்க்கெட் கமிட்டியில் விற்பனை செய்தனர். உற்பத்தி குறைவு, வெளிமார்க்கெட்டில் அதிக விலை போன்ற காரணங்களால் அரசு கொள்முதல் நிலையங்களில் நெல் வரத்து குறைந்தது. கடந்த ஆண்டு கடலூர் மாவட்டத்தில் இதே காலகட்டத்தில் 1.13 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு

வறட்சி காரணமாக 35 ஆயிரம் டன் நெல் மட்டுமே கொள்முதல் செய்ய முடிந்தது. இதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது வறட்சியால் 3ல் ஒரு பங்கு மட்டுமே விளைச்சல் இருப்பது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க தலைவர் கோ.மாதவன் கூறுகையில், டெல்டா அல்லாத பகுதிகளில் 50 சதவீதத்துக்கும் குறைவாக பயிர் இழப்பீடு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் டெல்டா அல்லாத பகுதிகளுக்கு வறட்சி நிவாரணம் அளிக்க முடியாது என்றும் வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் நெல் கொள்முதல் 3ல் ஒரு பங்காக குறைந்துள்ள நிலையில், வறட்சியின் நிலையை அறிந்துகொள்ள முடியம். இதனால் டெல்டா பகுதிகளில் விடுபட்ட விவசாயிகளுக்கும், டெல்டா அல்லாத பகுதிகளில் அனைத்து விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க அரசு முன்வரவேண்டும் என்றார்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் ராதாகிருஷ்ணனிடம் கேட்டபோது, மாவட்டத்தில் சிதம்பரம் வட்டம் மட்டும் டெல்டா பகுதி. இங்கு அரசு அறிவித்த வறட்சி நிவாரணம் தகுதியான விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் டெல்டா அல்லாத பகுதிகளில் 50 சவீதத்துக்கும் குறைவான அளவே பயிர் இழப்பு ஏற்பட்டுள்ளாதாக கள ஆய்வில் தெரியவந்துள்ளது. இதனால் கடலூர் மாவட்டத்தில் டெல்டா அல்லாத பகுதிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கவேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கை அரசின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்படும் என்றார்.

தினகரன்

இன்றைய வேளாண் செய்திகள்

27.04.2013 A.M

---

## பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானியில் தண்ணீர் நிறுத்தம் பவானி ஆற்றில் திறக்க ஏற்பாடு

ஈரோடு: பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்பட்டு இருந்தது. 11 நாட்களுக்கு பிறகு நேற்று நிறுத்தப்பட்டது. இதையடுத்து பவானி ஆற்றில் தண்ணீர் திறக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பவானிசாகர் அணையில் இருந்து தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, கீழ்பவானி, காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. ஆனால் இந்த ஆண்டு கடுமையான வறட்சி காரணமாக தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்திற்கு மட்டும் ஒருபோக நெல் சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. கீழ்பவானி பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறக்காத நிலையில் இந்த பகுதி வறண்டு போனது.

இதையடுத்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் கீழ்பவானி பாசன விவசாயிகள் சங்கம் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. இதையடுத்து 11 நாட்களுக்கு தண்ணீர் திறக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. கடந்த 14ம் தேதி பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் திறக்கப்பட்டது. 500 கனஅடியாக திறக்கப்பட்ட நீர் படிப்படியாக உயர்த்தி 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. தண்ணீர் வாய்க்காலில் திறப்பதற்கு முன்பு 42 கனஅடியாக அணையின் நீர்மட்டம் இருந்தது. தொடர்ந்து 2 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டதால் அணையின் நீர்மட்டம் குறைந்து போனது. 11 நாட்கள் தண்ணீர் திறக்கப்பட்ட நிலையில் நேற்று வாய்க்காலில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளது.

நேற்று மாலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 32.30 அடியாக உள்ளது. அணைக்கு 150 கனஅடி வீதம் தண்ணீர் வரத்து உள்ளது. இதில் கீழ்பவானி வாய்க்காலில் தண்ணீர் நிறுத்தப்பட்ட நிலையில் வழக்கம்போலவே பவானி ஆற்றில் 150 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது. பவானி ஆற்றையொட்டிய பகுதிகளில் குடிநீருக்காக ஆற்றில் இருந்து

தண்ணீர் திறக்க பொதுப்பணித்துறையினர் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார்கள். தற்போது அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ள நிலையில் நீர்வரத்தும் குறைவாகவே உள்ளது. பவானி ஆற்றில் தண்ணீர் திறக்கும்போது அணையின் நீர்மட்டம் இன்னும் வெகுவாக குறைய வாய்ப்புள்ளது.

## தண்ணீர் பற்றாக்குறையால் கம்பம் பள்ளத்தாக்கில் மானாவாரி பயிர்கள்

கம்பம்: தேனி மாவட்டம் லோயர்கேமப் முதல் வீரபாண்டி வரை 14 ஆயிரத்து 707 ஏக்கர் பரப்பில் இருபோக நெல் விவசாயம் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில் காமயகவுண்டன்பட்டி, நாராயணத்தேவன்பட்டி பகுதி வயல்களுக்கு சுருளிப்பட்டி முல்லை பெரியாறில் இருந்து பிரிந்து வரும் தலைமதகு பகுதியில் இருந்து சின்னமனு£ர் கருகாட்டான்குளம் வரை செல்லும் பாளையம் பரவு வாய்க்கால் மூலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. இப்பகுதி விவசாயிகள் இரு போக நெல் சாகுபடி செய்யப்பட்டு வந்தனர். கடந்த சில ஆண்டுகளாகவே முல்லை பெரியாறில் பாசனத்திற்கு தேவையான தண்ணீர் திறந்து விடப்படாததால் ஒரு போகம் மட்டுமே சாகுபடி செய்து வருகின்றனர்.

தற்போது பெரும்பாலான விவசாயிகள் நெல் பயிரிட வழியின்றி மானா வாரி பயிர்களான மக்காசோளம், வெள்ளை சோளம், கம்பு, கேழ்வரகு, துவரை உள்ளிட்ட பயிர்களை பயிர் செய்து வருகின்றனர்.

## காய்கறி விலை உயர்வு

பழநி: மழை இல்லாததால் பழநியில் காய்கறி விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

பழநி பகுதியில் 80க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்கள் விவசாயத்தை அடிப்படையாக கொண்டவை. அணைகளை நம்பியும், அணைகளில் இருந்து நீர்ப்பாசனம் பெறும் கண்மாய்களை நம்பியுமே விவசாயம் செய்யப்படுகிறது. போதிய மழை இல்லாததால் அணைகள் மற்றும் கண்மாய்கள் தற்போது வறண்டு கிடக்கின்றன. இதனால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. வரத்து குறைவால் காய்கறி விலை உயர்ந்துள்ளது.

பழநி காந்தி மார்க்கெட் வியாபாரி யோகேஸ்வரன் கூறுகையில், மழை இல்லாத காரணத்தால், வரத்து குறைந்து காய்கறிகள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. கடந்த சில தினங்களாக கிலோ ரூ.10க்கு விற்பனை செய்யப்பட்ட தக்காளி தற்போது கிலோ ரூ.26க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிலோ ரூ.27க்கு விற்பனையான வெங்காயம், தற்போது ரூ.50க்கு விற்பனையாகிறது.

கிலோ ரூ.40க்கு விற்பனை செய்யப்பட்ட பீன்ஸ் தற்போது ரூ.80க்கு விற்பனை செய்யப்படுகிறது. கிலோ ரூ.25க்கு விற்ற கத்தரி, தற்போது ரூ.48க்கு விற்பனை செய்யப்படுகிறது. ரூ.20க்கு விற்ற உருளைக் கிழங்கு தற்போது ரூ.32க்கு விற்பனை செய்யப்படுகிறது.
பச்சை மிளகாய் ரூ.80, பட்டர் பீன்ஸ் ரூ.170, பச்சை பட்டாணி ரூ.80, முருங்கை ரூ.30, கொத்தமல்லி தழை ரூ.80, கருவேப்பிலை ரூ.20, முட்டை கோஸ் ரூ.32, புடலை ரூ.40க்கு விற்பனை செய்யப்படுகிறது. மழை பெய்தால் தான் காய்கறிகள் விலை குறையும், என்றார்.

## மாம்பழ சீசனால் வாழைத்தார் விலை கடும் வீழ்ச்சி விவசாயிகள் கவலை

சிவகங்கை: மாம்பழம் சீசனால் வாழைத்தார்களின் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் சிவகங்கை பகுதி விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
சிவகங்கை அருகேயுள்ள மலம்பட்டி வாழைச்சந்தை செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் கூடி வருகிறது. சந்தையில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழைத்தார்களும், 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இலைக்கட்டுகளும் ஏலம் விடப்படும். இச்சந்தைக்கு மலம்பட்டி, கூட்டுறவுபட்டி, இடையமேலூர், நாயத்தான்பட்டி, அம்பலகாரன்பட்டி, சிவல்பட்டி, கன்னிமார்பட்டி, சோனைபட்டி, கண்டாங்கிப்பட்டி, அழகிச்சிப்பட்டி, கூலிப்பட்டி, புதுப்பட்டி, தமராக்கி உள்ளிட்ட பகுதிகளில் விளையும் வாழைத்தார்களும், இலைக்கட்டுகளும் கொண்டு வரப்படும். இங்கு விற்கப்படும் வாழைத்தார்களை திண்டுக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி, தேவகோட்டை, திருப்புத்தூர், சிவகங்கை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர்.
மாம்பழம் சீசன் துவங்கிய நிலையில், நேற்று கூடிய மலம்பட்டி சந்தையில், வாழைத்தார்களின் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்தன. கடந்த வாரம் ரூ.350 வரை விற்கப்பட்ட பூவன் வாழைத்தார் ரூ.200க்கு விற்கப்பட்டது. அதேபோல் ரூ.350க்கு விற்கப்பட்ட ரஸ்தாளி ரூ.250க்கும், ரூ.700க்கு விற்கப்பட்ட செவ்வாழை ரூ.400க்கும், ரூ.300க்கு விற்கப்பட்ட பச்சை ரகம் ரூ.200க்கும், ரூ.250க்கு விற்கப்பட்ட ஒட்டு, மொந்தை ரூ.150க்கும், ரூ.350க்கு விற்கப்பட்ட நாடு ரகம் ரூ.250க்கும் விற்கப்பட்டன. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர். ஆனால் விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக கடந்த வாரம் ரூ.250க்கு விற்கப்பட்ட இலைக்கட்டுகள் ரூ.500க்கு விற்கப்பட்டது.
இதுகுறித்து விவசாயி பாண்டி கூறுகையில், ‘மாம்பழ சீசன் துவங்கி விட்டதால், தள்ளுவண்டி, தெருக்களில் விற்கும் வியாபாரிகள் வாழைப்பழம் வாங்குவதை தவிர்த்துவிட்டு, மாம்பழம் வாங்கி விற்க துவங்கி விட்டனர். இதனால் வாழைத்தார்களின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

பொதுவாக மே மாதத்தில் தான் விலை குறைய துவங்கும். ஆனால் ஏப்ரல் இறுதி வாரத்திலே வாழைத்தாரின் விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்ததால், எங்களுக்கு மிகுந்த பாதிப்பாக உள்ளது' என்றார்.

## சூறாவளியுடன் கனமழை 5ஆயிரம் வாழை நாசம்

உடுமலை: உடுமலையை அடுத்த குடிமங்கலம் ஒன்றியம் மூங்கில் தொழுவு, கொசவம் பாளையம், வாழத்தொழுவு ஆகிய கிராமப்பகுதிகளில் நேற்று முன்தினம் இரவு பலத்த இடி மின்னலுடன் மழை பெய்தது. அதில் வாகைத்தொழுவு கிராமத்தில் மயில்சாமி,விஸ்வநாதன் ஆகியோருக்கு சொந்தமான 1.105 ஹெக் டேர் பரப்பளவில் பயிரிட்டிருந்த வாழைகள், தென்னைகள் முறிந்து நாசமடைந்தன. மேலும்  2 ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்டிருந்த 2 ஆயிரம் வாழைகள், 7 தென்னைகள், கொசவம் பாளையத்தில் பழனிச்சாமிக்கு சொந்தமான 2 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த 1500 வாழைகள், தங்கவேலு தோட்டத்தில் 10 தென்னை கள், சீனிவாசன் தோட்டத்தில் 8 தென்னைகள், ஜோதிவேல் தோட்டத்தில் 10 தென்னைகள், அனிக்கடவு வெங்கிடபதிக்கு சொந்தமான 2 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த 1500 வாழைகள் அறுவடைக்கு தயராக இருந்த நிலையில் முறிந்து விழுந்தன.  உடுமலை தாசில்தார் சைபுதீன் வருவாய் ஆய்வ £ளர் பாஸ்கரன் ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று பார்வையிட்டனர்.

## தோட்டப்பயிர் தொழில்நுட்ப கருத்தரங்கு

ஊட்டி: நீலகிரி மாவட்டத்தில் உள்ள தோட்டப்பயிர் விவசாயிகளுக்கு வளம் குன்றா தோட் டப்பயிர் உற்பத்திக்கான இயற்கை வள பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் என்ற தலைப்பில் குறுகிய கால பயிற்சி 29ம் தேதி துவங்குகிறது. ஊட்டி மத்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் நடக்கும் இந்த பயிற்சி முகாம் 3ம் தேதி வரை 5 நாட்கள் நடக்கிறது.

ஊட்டியில் உள்ள ரோஜா பூங்கா கட்டிடத்தில் அமைந்துள்ள பயிற்சி அரங்கில் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை குறுகிய கால பயிற்சி நடக்கிறது. இப்பயிற்சியின் முக்கிய நோக்கம் தோட்ட பயிர்களில் வளம் குன்றா உற்பத்திக்கான இயற்கை வள பாதுகாப்பு தொழில் நுட்பங்களில் விவசாயிகளின் திறனை மேம்படுத்துதல் ஆகும்.

பயிற்சியின் போது மண் மற்றும் நீர் வள பாதுகாப்பு முறைகள், நீர் சேகரிப்பு மற்றும் அதன் மறுசுழற்சி, பழம், காய் கறி, கொய்மலர்கள், நறுமணம் மற்றும் மலை பயிர்கள் சாகுப்படிக்கான நவீன தொழில்நுட்பங்கள், பயிர் பாது காப்பு முறைகள், பண் ணை இயந்திரமயமாக் கல்,

அறுவடைக்கு பிந்தைய தொழில் நுட்பம், மதிப்பு கூட்டுதல், சுய உதவிக்குழுக்கள் மூலம் வாழ்வாதாரத்தை பெருக்குதல் போன்றவற்றிற்கான தொழில்நுட்பங்கள் பயிற்றுவிக்கப்பட உள்ளது.

இது தவிர விவசாயிகளுக்கு மேற்கூறிய தொழில்நுட்பங்களில் மத்திய மண் மற்றும் நீர்வள பாதுகாப்பு மையத் தின் ஆராய்ச்சி பண்ணை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தின் தோட்டக்கலை ஆராய்ச்சி பண்ணைகளில் செயல் விளக்கம் அளிக்கப்பட உள்ளது.

மேலும் நீலகிரி மாவட்டத்தின் வளம் குன்றா தோட்டப் பயிர் உற்பத்திகான, இயற்கை வள பாதுகாப்பு மற்றும் மேம்பாடு, இயற்கை வேள £ண்மை மற்றும் காலநிலை மாற்றம் போன்றவற்றில் விவசாயிகளுக்கு தேவை யான விழிப்புணர்ச்சி அளிக்கப்படும். இதில் மத்திய மண் மற்றும் நீர் வள ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம் மற்றும் வேளாண் அறிவியல் மையத்தில் உள்ள அறிவியலாளர்கள், விரிவுரையாளர்கள் கலந்து கொண்டு பயிற்சி அளிக்க உள்ளார்கள். துவக்க விழாவிற்கு மாவட்ட கலெ க்டர் அர்ச்சனா பட்நாயக் தலைமை வகிக்க உள்ளார். ஆராய்ச்சி நிலைய தலைவர் கோலா, தோட்டக்கலை இணை இயக்குநர் மோகன் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர்.

மண் மற்றும் நீர்வள ஆராய்ச்சி மைய மூத்த விஞ்ஞானி மணிவண்ணன் பயிற்சி குறித்து பேசுகிறார். இப்பயிற்சிக்கான நிதியுதவினை தேசிய தோட்டக்கலை திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்ட தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர் துறை வழங்கியுள்ளது.

## பாரம்பரிய உணவு தானிய உற்பத்தி அதிகரிக்க விவசாயிகளுக்கு அறிவுரை

ஊட்டி:ஊட்டி வட்டாரத்தை சேர்ந்த கக்குச்சி கிராமத்தில் தோட்டக்கலைத்துறை சார்பில் பாரம்பரிய பொருட்களாகிய ராகி, சாமை, கோதுமை, பாப்பரை, கீரை ஆகிய பயிர்களின் சாகுபடியினை ஊக்குவிக்கும் பொ ருட்டு கருத்தரங்கம் நடந்தது.

கருத்தரங்கில் உதவி இயக்குனர் மீராபாய் வரவேற்றார். தோட்டக்கலைத்துறை இணை இயக்குநர் மோகன் தலைமை வகித்து சிறுதானிய பயிர்கள் குறித்தும், அதனை பயிரிடும் முறை மற்றும் நண்மைகள் குறித்து பேசி னார். தோட்டக்கலைத்துறை உதவி பேராசிரியர் முனைவர் ராஜா சிறுதானிய சாகுபடி முறைகள் மற்றும் அவற்றின் ஊட்ட சத்துக்கள் குறித்து விரிவாக பேசினார். வேளா ண்மை வணிகத் துறை துணை இயக்குனர் சாந்தி கலந்து கொண்டு சிறுதானிய பயிர்கள் சந்தைப்படுத்துதல் குறித்து பேசினார்.

தொடர்ந்து சாகுபடியினை ஊக்குவிக்கும் வகையில் படக்காட்சிகள் மூலம் விவசாயிகளுக்கு

விளக்கினர். கோதுமை ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர் கலந்து கொண்டு கோதுமை, பாப்ப ரை ஆகிய பயிர்கள் சாகுபடி செய்யும் முறைகள் குறித்து மாதிரிகளுடன் விளக்கினர். இக்கருத்தரங்கில் துணை இயக்குனர் மணி, கக்குச்சி, இடுஹட்டி, அஜ்ஜுர், கொது முடி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## பொருளாதார நிலையால் விவசாயத்திலிருந்து மாறுகின்றனர்

திருக்கோவிலூர்: திருக்கோவிலூர் அடுத்த சொரையப்பட்டு கிராமத்தில் உழவர் விழா நடந்தது. ஒன்றிய குழு தலைவர் துளசிராஜா தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் விஸ்வநாதன் வரவேற்றார்.

வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடிஜெபக்குமார் பேசுகையில், உலகில் வளர்ந்து வரும் பொருளாதாரத்தில் பிறதொழில் வளமும் பெருகுவதால் தொழிலாளர்களுக்கு பல்வேறு வாய்ப்புகள் அதிகரிக்கிறது. அதனால் தொழிலாளர்கள் அடிப்படை தொழிலான விவசாயத்தில் இருந்து பிறதுறைகளுக்கு இடம் மாறுகின்றனர். இந்த பிரச்னை உலகில் உள்ள அனைத்து வளர்ந்து வரும் பொருளாதார நாடுகளும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. தொழிலாளர்கள் பற்றாக்குறையை எதிர்கொள்ள தமிழக அரசு வேளாண்மைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை மூலம் இயந்திரமாக்குதல் நடைமுறைப்படுத்தி வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு விதைப்பு முதல் அறுவடை வரை அனைத்து பணிகளுக்கும் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. நெல்லில் நடவு இயந்திரங்கள், பவர் டில்லர்கள், களை எடுக்கும் கருவிகள், அறுவடை இயந்திரங்கள், கரும்புக்கு இடை உழவு செய்திட மினி டிராக்டர்கள், பயிறு மற்றும் மணிலாபோன்ற பயிர்கள் வரிசையாக விதைப்பு செய்திட விதைப்பு கருவிகள், வரப்புகள் மற்றும் மரங்களை சுற்றி களை அப்புறப்படுத்த புதர்நீக்க கருவிகள், பயிர்களுக்கு மருந்து தெளித்திட பேட்டரி மூலம் இயங்கும் ஸ்பிரேயர்கள், வேளாண்பொறியியல் துறை மற்றும் வேளாண்மை துறை சார்பில் வழங்கப்படுகிறது என்றார்.

இதனை தொடர்ந்து ஒன்றிய குழு தலைவர் துளசிராஜா பயனாளிகளுக்கு பவர்டில்லர் இயந்திரம் மற்றும் திருந்திய நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு அரசுமானியம் ரூபாய் 2 ஆயிரத்தை வழங்கினார். நிகழ்ச்சியில், மாவட்ட கவுன்சிலர் தங்கராசு, ஆத்மா திட்ட வட்டாரதலைவர் கங்காதரன், ஒன்றிய கவுன்சிலர் மரியபிரகாசம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் செந்தில்குமார் செய்திருந்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**27.04.2013 A.M**

---

## வறட்சியால் விவசாயம் பாதிப்பு: விவசாயிகளுக்கு வங்கி கணக்கில் நிவாரண தொகை விவரங்கள் சேகரிக்கும் பணி தீவிரம்

திண்டுக்கல்

வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வங்கி கணக்கில் நிவாரண தொகை வழங்கப்பட இருக்கிறது. இதற்காக விவசாயிகள், பயிர் சேத விவரங்களுடன் பட்டியல் தயாரிக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

வறட்சி பாதிப்பு

தமிழகத்தில் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்து விட்டது. இதனால் தேவையான அளவு தண்ணீர் இல்லாமல் விவசாயம் பெருமளவில் பாதிக்கப்பட்டது. நெல், கரும்பு, வாழை, மக்காசோளம் என்று ஏறக்குறைய அனைத்து பயிர்களும் தண்ணீர் இல்லாமல் கருகின. விவசாயத்தில் முதலீடு செய்த பணமும் கிடைக்காமல் போய்விட்டதால் விவசாயிகள் தவித்து வந்தனர்.

இந்த நிலையில் வறட்சியால் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணத்தொகை வழங்கப்படும் என்று தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா அறிவித்தார். இதில் முதல்கட்டமாக டெல்டா பகுதி விவசாயிகளுக்கு நிவாரணத்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

நிவாரணத்தொகை

இதனையடுத்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பிற மாவட்ட விவசாயிகளுக்கும் நிவாரணத் தொகை வழங்கப்பட இருக்கிறது. இதற்காக அமைச்சர்களை கொண்ட குழுவினர் மாநிலம் முழுவதும் பயிர்களை பார்வையிட்டு சென்றனர். இதனை தொடர்ந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட

பயிர்களின் அளவு, விவசாயிகளின் விவரங்களை பட்டியலிட்டு அனுப்பும்படி அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயிகள், பயிர்சேதம் குறித்த விவரங்களுடன் பட்டியல் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. இந்த பணியில் உதவி வேளாண்மை அலுவலர், கிராம நிர்வாக அலுவலர், வருவாய் ஆய்வாளரை கொண்ட குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

வங்கி மூலம்

இதில் பயிர் பாதிப்பிற்கு ஏற்ப அரசு நிர்ணயித்த நிவாரணத்தொகை, விவசாயிகளின் முகவரி, அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் அந்த வங்கியில் விவசாயிகளின் சேமிப்பு கணக்கு ஆகிய விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகிறது. கிராமம், தாலுகா வாரியாக விவரங்கள் சேகரிக்கப்பட்டு இந்த மாதம் இறுதியில் அரசுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

இதற்கான பணிகளில் கிராம நிர்வாக அலுவலர்கள் முதல் தாசில்தார், கோட்டாட்சியர் வரை அனைவரும் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இன்னும் ஒன்றிரண்டு வாரத்தில் வறட்சி நிவாரணத்தொகை பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தப்படும்.

## உயிரியல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் வேளாண் பல்கலைக்கழகம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கோவை,

பொது மற்றும் தனியார் பங்கேற்பின் ஒரு பகுதியாக கோவையில் உள்ள தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், பெங்களூரில் உள்ள உயிரியல் கட்டுப்பாடு ஆராய்ச்சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டது.

வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் கு.ராமசாமி முன்னிலையில் பதிவாளர் ப.கலைச்செல்வன், பெங்களூர் உயிரியல் கட்டுப்பாடு ஆராய்ச்சி நிறுவன துணைத்தலைவர் கே.பி.ஜெயந்த் ஆகியோர் கையெழுத்திட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டனர். நிகழ்ச்சியில் பயிர் பாதுகாப்பு மைய இயக்குனர் இ.ஐ.ஜோனத்தன், இயக்குனர் சிவசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் உயிரியல் சார்ந்த பயிர் பூச்சி மற்றும் நோய் கட்டுப்பாடு, இன ஈர்ப்பு சுரப்பு தொழில்நுட்பம் மற்றும் நகர்புறம் சார்ந்த பூச்சி நிர்வாகம் ஆகிய துறைகளில் கல்வி மற்றும்

ஆராய்ச்சியில் பெங்களூர் உயிரியல் கட்டுப்பாடு ஆராய்ச்சி நிறுவனம், வேளாண் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து செயல்பட உள்ளன.

## கோடை தொடங்கியதால் வரத்து குறைந்தது கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை 'கிடுகிடு' உயர்வு

சென்னை

கோடை தொடங்கியதால் காய்கறி வரத்து குறைந்துள்ளது. இதனால், சென்னை கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. விலை கூடியதால் விற்பனையும் மந்தமாக காணப்படுகிறது.

விவசாயம் பாதிப்பு

தமிழகம் முழுவதும் கோடை வெயில் சுட்டெரிக்க தொடங்கியுள்ளது. நீர் நிலைகள் எல்லாம் வரண்டு வருகின்றன. ஏற்கனவே இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழையும் போதிய அளவு பெய்யாததால் விவசாயம் பெருமளவு பாதிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் காய்கறி உற்பத்தி பாதிக்கப்பட்ட நிலையில், வெளி மாநிலங்களில் இருந்து வரும் காய்கறி வரத்தும் தற்போது குறைந்துள்ளது. இதனால், காய்கறி விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

விலை உயர்வு

தமிழகத்திற்கு அண்டை மாநிலங்களான ஆந்திரா, கர்நாடகாவில் இருந்துதான் அதிக காய்கறி வரத்து இருக்கும். அங்கிருந்து சென்னை கோயம்பேடு மார்க்கெட்டிற்கு மட்டும் தினமும் 300 லாரிகளில் காய்கறி வரும். ஆனால், தற்போது கோடை தொடங்கியுள்ளதால், சுமார் 180 லாரிகளில் மட்டுமே காய்கறி வரத்து உள்ளது. இதனால், கோயம்பேடு மார்க்கெட்டில் காய்கறிகளின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. கோயம்பேடு காய்கறி மொத்த மார்க்கெட்டில் கடந்த வாரம் ரூ.18–க்கு விற்பனையான ஒரு கிலோ தக்காளி தற்போது ரூ.25 ஆக விலை உயர்ந்துள்ளது.

சின்ன வெங்காயம் ரூ.45

இதேபோல், கத்தரிக்காய் ரூ.12–ல் இருந்து ரூ.25 ஆகவும், அவரைக்காய் ரூ.25–ல் இருந்து ரூ.35 ஆகவும், வெண்டைக்காய் ரூ.18–ல் இருந்து ரூ.20 ஆகவும், பீட்ரூட் ரூ.12–ல் இருந்து ரூ.20 ஆகவும், கேரட் ரூ.25–ல் இருந்து ரூ.30 ஆகவும், மாங்காய் ரூ.6–ல் இருந்து ரூ.10 ஆகவும் விலை அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், கடந்த வாரம் விண்ணை முட்டும் அளவுக்கு ரூ.90 வரை விலை

உயர்ந்த ஒரு கிலோ பீன்ஸ் தற்போது ரூ.70 ஆக சரிந்துள்ளது. மேலும், பல்லாரி வெங்காயம் ஒரு கிலோ ரூ.22–ல் இருந்து ரூ.17 ஆக விலை குறைந்துள்ளது. கோஸ் ரூ.8 ஆகவும், சின்ன வெங்காயம் ரூ.45 ஆகவும், சேனைக்கிழங்கு ரூ.15 ஆகவும் பழைய விலையிலேயே நீடித்தது.

வியாபாரிகள் கவலை

தற்போது, பள்ளி மாணவர்களுக்கு கோடை விடுமுறை தொடங்கியுள்ளதால், சென்னையில் உள்ள பெரும்பாலானவர்கள் குடும்பத்துடன் சொந்த ஊர்களுக்கு சென்றுவிட்டனர். அதே நேரத்தில், காய்கறி விலையும் அதிகரித்துள்ளதால், கோயம்பேடு மார்க்கெட் வெறிச்சோடி காணப்படுகிறது. விற்பனை குறைந்துள்ளதால் காய்கறி வியாபாரிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர். கோடை காலம் முடியும் வரை காய்கறி விலை குறைய வாய்ப்பு இல்லை என்றே வியாபாரிகள் கருத்து தெரிவித்தனர்.